தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 10, July - 2025**

DOIs: https://doi.org/10.63300/tm0110202501 --:-- Research

# Exploring Maternal Uncle Kinship in Classical Tamil Folk Ballads

**Dr. S. Renuka Devi,**
Guest Lecturer, Tamil Department
M.V. Muthiah Government Arts College for Women, Dindigul,
Email: renukatrinetra@gmail.com

***Abstract:*** *Some customs and elements of society change and shrink over time and in the future, their characteristics will be such that they will appear as a remnant in the events of society in some way or another. This article is a study of how the importance given to maternal uncles in the rituals of life of the folk people of Tamil Nadu, as a remnant of the matrilineal society of ancient Tamils, is recorded in folk songs. In lullabies, the image of maternal uncles, the praise of their bravery, the pride of a sister for the care given to her newborn child by her younger brother, the love of the maternal uncle who guards the place where the child plays, the nature of encouraging the child to attend school, the importance given to the maternal uncle in events such as the ear piercing ceremony, the holy bathing ceremony of a girl child, and the marriage ceremony are highlighted.*

***Keywords:*** *Folk songs, matrilineal society, remnant, primary relative, secondary relative, maternal uncle, rituals.*

# நாட்டுப்புறப் பாடல்களில் தாய்மாமன் உறவு

**முனைவர் சு.ரேணுகா தேவி,**
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்*
*renukatrinetra@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்:*** *சமூகத்தின் சில வழக்கங்கள், கூறுகள் போன்றவை பல காலக் கட்டங்களைக் கடந்து செல்லும் போது அவற்றின் தன்மைகள் மாற்றம் பெற்று சுருங்கிப் போய் வருங்காலத்தில் மிச்ச சொச்சமாக சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் இலைமறை காயாக வெளிப்படும் இயல்புடையனவாக இருக்கும். பண்டையத் தமிழர்களின் தாய்;வழிச் சமூகத்தின் எச்சமாக இன்று தமிழக நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகளில் தாய்மாமனுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நாட்டுப்புறப் பாடல்களில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தாலாட்டுப் பாடல்களில் தாய்மாமனின் உருவம், வீரம் போற்றப்படலும் பிறந்த குழந்தைக்குத் தன் உடன்பிறந்தான் செய்த சீர் குறித்து சகோதரி கொள்ளும் பெருமிதமும், குழந்தை விளையாடும் இடத்திற்குப் பந்தலிட்டு பாதுகாக்கும் மாமனின் அன்பும், பள்ளியில் சேர்த்து குழந்தையின் கல்வியை ஊக்குவிக்கும் தன்மையும் காதுகுத்தும் சடங்கு, பெண் குழந்;தையின் பூப்புனித நீராட்டு விழா, திருமணச் சடங்கு போன்ற நிகழ்வுகளில் தாய்மாமனுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தின் பின்னணி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

***குறிப்பு சொற்கள்*** *: நாட்டுப்புறப் பாடல்கள், தாய்வழிச் சமூகம், எச்சம், முதன்மை உறவினர், துணைமை உறவினர், தாய்மாமன், சடங்குகள்.*

**முன்னுரை:**

நாட்டுப்புறப் பாடல்கள் காற்றில் மிதக்கும் கவிதைகள் என்றாலும் கூட அவை மண்ணில் மலர்பவை. மண்ணின் வாசனையும் வளமும் உலராமல் ஒட்டி கிடப்பதுதான் அவற்றின் சிறப்பியல்புகளும் சீர்களும் ஆகும். .சாதாரண பாமர மக்களிடம் இவை உருப்பெற்றதால் புரிந்துகொள்வது மிகவும் சுலபமாகும். எளிய பதங்களும் யாரும் பாடக்கூடிய தன்மையும் வட்டார வழக்குச் சொற்களும் உடையதாகும். இலக்கண வரம்பிற்கு உட்படாமலும் கையாள்வதற்கு எளிதாகவும் உள்ளது. மக்கள் மனத்தில் உள்ள எண்ணங்கள், ஏக்கங்கள், லட்சியங்கள், நம்பிக்கைகள், இன்ப துன்பங்கள், உணர்வுகள் ஆகிய அனைத்தையும் இவை பிரதிபலிக்கின்றன எனலாம். தமிழ் மக்களின் உணர்வுக் களஞ்சியமாக விளங்கும் இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் மாமன் உறவு எவ்வாறு பேசப்படுகிறது என்பதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் மாமன் உறவு மூன்று நிலைகளில் வைத்துப் பார்க்க முடிகிறது.

1. **தாய்மாமன் உறவு**
2. **முறைமாமன் உறவு**
3. **மாமனார் உறவு**

**தாய்வழிச் சமூகமும் தாய்மாமன் உறவும்:**

பண்டைக் காலத்தில் தாய்த்தலைமை முறை பரவலாக ஓங்கியிருந்த போது திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியின் வீட்டிற்குச் சென்று வாழ்ந்து வந்தான் அல்லது அவ்வப்போது சென்று வருபவனாக இருந்தான். இந்நிலையில் மாமியார் மருமகனைத் தன் குடும்பத்தைச் சார்ந்த ஒருவன் என மதிக்காமல் அவளது மக்களையும் சகோதரியின் மக்களையும் மட்டுமே பெரியதாக மதித்தாள். அவர்களே அக்குடியின் கால்வழியினர் என்பதால் அவர்கள் அனைவரும் முதன்மை உறவினர் (primary kin) என்ற வட்டத்திற்குள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். மருமகனும் அவனுடைய உறவினர்களும் இரண்டாம் நிலை உறவினராகவே (secondary kin) கருதப்பட்டனர். இதனால் தாய்வழிக் குடும்பதைச் சேர்ந்த முதனிலை உறவினர்கள் அக்குடும்பத்தின் மருமகனை குறிப்பிட்டுக் கூற முற்பட்ட போது இக்குழந்தைகளின் தந்தை என்றே குறிப்பிட்டனர். மக்களின் வழி தந்தை குறிப்பிடப்படுவது தாய்வழி சமூகத்தின் கூறாகவும், இது பிந்தைய நிலைகளில் எச்சக்கூறாகவும் தொடர்ந்து காணப்பட்டது என்கிறார் டைலர்.(பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், பக்.49-50)

தமிழ்ச் சமூகத்தில் சேய்வழி அழைத்தல் சங்க இலக்கியம் தொட்டு அறிய முடிகிறது. மகள், மகன் பெயரைக் கூறிப் பின்னர் தந்தையைக் கூறும் மரபு சங்க இலக்கியங்களில் சுட்டப்படுகிறது.

**அகுதை தந்தை (அகம். 96)**
**அரிவையர் தந்தை (புறம்.117)**
**இயினன் தந்தை (ஐங்.409)**
**இவள் தந்தை (நற்.8, ஐங்.60,களி.61, புறம்.336).**
**இளையோள் தந்தை (புறம்.341)**
**குறுங்கொடி தந்தை (குறுந்.233)**

இத்தகைய தாய்வழிச் சமூக அமைப்பில் குழந்தை வளர்ப்பில் முழு பொறுப்புடன் தாயின் சகோதரர்கள் செயல்பட்டு வந்துள்ளனர். அதன் எச்சமே இன்றைய சடங்கு முறைகளில் தாய்மாமனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் எனலாம். நாட்டுப்புறப் பாடல்களில் தாய்மாமனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் பின்னணியாக இதைக் காண முடிகிறது.

குருதி கலப்பாலும் மண உறவாலும் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறைகள் அமைகின்றன. குருதிவழி உறவுகளும் மணவழி உறவுகளும் ஒருமனிதனின் வாழ்வில் பெரும்பங்கு

வகிக்கின்றன. குறிப்பாகப் பெண்களைப் பொருத்தமட்டில் இவை இரண்டுமே தொன்மை வாய்ந்ததாக உள்ளன. இவற்றில் குருதிவழி உறவுகள் அவளுக்கு நன்மை செய்யக் கூடியனவாகவும் மணவழி உறவுகள் பல தீமை செய்யக் கூடியனவாகவும் உள்ளதாக எண்ணுகின்றனர்.

**ஆருவரா..(ன்) ரோட்டுமேல**
**எங்கண்ணா வராரென்று சொல்லி**
**நா..இன்னா இன்னு செய்ய போறெ..(ன்)**
**சீரவஞ் சம்பா நெல்லெடுத்து சீக்கரமா குத்துங்கடி**
**எங்கண்ணா வரார் ரோட்டுமேல வாழஎல பெறிஞ்சி வையுங்கடி**
**வெள்ள சோத்த சாப்பிடுங்க அண்ணம்மாரே சாய்ஞ்சிடுங்க ஊஞ்சலில**
**ஆருவரா..(ன்) ரோட்டுமேல மாமா வரார் ரோட்டு மேல**
**(சத்தியசீலன்.சி., நாட்டுப்பற இலக்கிய ஆய்வுகள், ப.80)**

ஒரு பெண் பிறந்தது முதல் மணமாகும் வரை வாழ்வின் பெரும் பகுதியை உடன் பிறந்தவர்களுடன் கழிக்கிறாள். சிறுவயது முதல் விளையாடுதல், பள்ளி செல்லுதல் ஆகிய அனைத்தும் அவர்களுடன் இணைந்தே நடக்கின்றன. இக்காலத்தில் உடன் பிறந்தவர்கள் அவளுக்குத் தேவையானவற்றை வாங்கித் தந்து அவளின் விருப்பங்களை நிறைவு செய்கின்றனர். இதனால், அவள் இயல்பாகவே உடன் பிறந்தவர்களுடன் மிகவும் அன்புடன் பழகுகிறாள். இந்தப் பழக்கம் அவள் மனதில் அண்ணன் தன் வாழ்விற்கு உறுதுணையாக இருப்பான் என்னும் எண்ணத்தை ஏற்படுத்துகிறது. இந்த எண்ணத்தின் விதை அவர்கள் பாடும் நாட்டுப்புறப் பாடல்கள் அனைத்திலும் பதிவாகியுள்ள தன்மையினைக் காணமுடிகிறது.

**தாய்மாமன் உருவ வருணனை:**

நெல்லை மாவட்டத்தில் ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாடும் தாலாட்டுப் பாடலில் தன் உடன்பிறந்தானின் அழகினையும் சிவந்த நிறத்தினையும் தூய வேட்டி கட்டிவரும் மேன்மையினையும் அறிமுகப்படுத்துகிறாள். இதனை,

**“செக்கச் சிவப்பரோ- உங்க மாமா**
**சீமைக்கோர் அதிபதியோ**
**அழகு சிவப்பரோட -ஐயா நீ**
**அருமை மருமகனோ?**
**சின்னக் கிணறு வெட்டி**
**சிங்கார கல் பரவி**
**துவை வேட்டி போட்டு வரும்**
**துரை ராஜா உங்கள் மாமா" (நா.வானமாமலை,தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.90)**

எனும் பாடல் வழி உணர முடிகிறது.

**தாய்மாமனின் வீரம் போற்றப்படல்:**

சிறுவன் சிவகிரியில் பிறந்தவன். மலைச்சாரலில் மான், பன்றி, முயல் போன்ற விலங்குகள் உண்டு. மலைச்சாரல் பயிரைக் காப்பதற்கும், இறைச்சி பெறுவதற்காகவும் சிவகிரி இளைஞர்கள், கடிநாய் பிடித்து வேட்டைக்குச் செல்லுவார்கள். இவர்களுள், சிறுவனது மாமன்மாரும் இருக்கிறார்கள். சிறுவனது தாய் அவர்களைப் பற்றித் தனது தாலாட்டில் கூறி, அவனது வீர உணர்வுக்கு உரமிடுகிறாள். இதனை,

**"காட்டக் கலைத்து உன்மாமன்**
**கடி நாயை ஏவிவிட்டு**
**வேட்டைக்குப் போராக,**
**வீரபுலி உங்கமாமன்,**

**பன்றி படுமோ,**
**பதினெட்டு மான் படுமோ,**
**சிங்கம் புலி படுமோ, உங்க**
**சின்ன மாமன் வேட்டையில" (நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.96)**

என்ற தாலாட்டுப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**பிறந்த குழந்தைக்குத் தாய்மாமன் செய்யும் சீர்:**

உடன்பிறந்தாளின் மகிழ்ச்சியில் தமையன்மாருக்கும் பங்கு கொடுத்துவிடுகின்றனர் சமுதாயத்தினர். மாமன் செய்த சீர்வரிசையைத் தாய் தனக்கேயுரிய பெருமித உணர்வில் பாடி மகிழ்கின்றாள்.

**"வண்ணமணி தொட்டி கட்டி பொன்னால் அரைஞாணும்**
**பூட்டினான் உன் மாமன்'**
**கன்னான் சிறு சதங்கை காலில் அழுத்துமென்று**
**பொன்னால் சிறு சதங்கை பூட்டினான் உன் மாமன்"**

**(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.235)**

தன் பிறந்தகச் சிறப்பைக் குழந்தைக்கு உணர்த்த விழைந்த தாய் குழந்தையின் அழுகைக்குக் காரணம் கேட்கும் போது கூட,

**"மாமன் அடித்தானோ மல்லியப்பூச் செண்டாலே**
**அத்தை அடித்தாளோ அடுக்குமல்லி செண்டால**
**பாட்டி அடித்தாளோ பால் புகட்டும் கையால"**

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.235)

என்று தாய்வீட்டு உறவையே தனித்தனியே உரைக்கின்றாள். குழந்தையை வளர்ப்பதில் பாட்டிக்கும் தாய்மாமனுக்கும் பங்குண்டு என்பதையும் உணர்த்திவிடுகிறாள். தாய்வீட்டு உறவின் நெருக்கத்தையும் அறிவுறுத்தி செல்கிறாள்.

**பெண் குழந்தைக்குச் செய்யும் சீர்:**

கணவன் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியிருக்கிறான்;. அதனைப் பெருக்கிக்கொள்ள அவனும் சிந்தித்தானல்லன். ஆனால் மாற்று ஏற்பாடாக மனைவியைக் கொடுமைப்படுத்துகின்றான். அவளுடைய உடன்பிறத்தார் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அவனிடம் உள்ளது. பொருளாதார வசதி இல்லாத அவளுடைய உடன்பிறந்தாரும் அவளுடைய சார்புநிலையைப் போற்றுகின்றனர். அவளுடைய சார்ந்த நிலையே பெருமையைத் தருகின்றது.

**"பால் குடிக்கக் கிண்ணி**
**பழந் திங்கச் சோணாடு**
**நெய் குடிக்கக் கிண்ணி**
**முகம் பார்க்கக் கண்ணாடி**
**கொண்டைக்குக் குப்பி மாமன்**
**கொண்டு வந்தார் தாய்மாமன்"**

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.133)

அடிப்படைத் தேவைகளைக்கூட மனைவியரின் உறவினர் தருவதைக் கணவன் தடுத்தானல்லன். மனைவியும் அவர்கள் தருவதைப் பெருமையாகக் கருதியிருக்கிறாள்.

**குழந்தை விளையாடப் பந்தலிடும் மாமன்:**

பெண்களுக்கு எப்போதும் பிறந்தகப் பற்று உண்டு. அது அவள் சாகும் வரையில் நீங்காது. தன் குழந்தை விளையாடும் போது குழந்தையின் மேல் வெயில்படும் என்று எண்ணித் தன் சகோதரன் மரம் நட்டும் பந்தலிட்டும் பாதுகாத்தான் என்று உடன் பிறந்தானின் பெருமை பேசுகிறாள் ஒரு தாய்.

**"வெளையாடப் போன பக்கோ – என்சாமி**
**வெய்யப் படுமுன்னு சொல்லி - உனக்கு**
**நடையாலே பூமரங்கோ**
**நடத்தி விட்டாருன் மாமே"**

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1,ப.240)

**"வெளையாடப் போன பக்கம்**
**வெயில் படும் என்று சொல்லி**
**வெள்ளியாலே கால் நிறுத்தி**
**வெத்திலையால் பந்தலிட்டு**
**பொன்னாலே கால் நிறுத்தி**
**பூவாலே பந்தலிட்டு**
**கமுகாலே கால் நிறுத்தி**
**கரும்பாலே பந்தலிட்டு**
**தங்கத்தால் கால் நிறுத்தி**
**தாமரையால் பந்தலிட்டு - அதிலே**
**பிள்ளை விளையாடுமென்று**
**அறிக்கை உட்டார் உன் மாமன்"**

**(நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள்,ப.96)**

இவ்வாறு குழந்தையின் மீது தாய் மாமன் கொண்டிருக்கக்கூடிய அன்பினைப் பதிவு செய்கின்றன நாட்டுப்புறப் பாடல்கள்.

மேலும் தன் குழந்தை நன்றாக வளர வேண்டும் என்பதற்காகப் பிறந்த வீட்டிலிருந்து சீதனமாக மாடு தந்தார்கள் என்று பிறந்த வீட்டின் பெருமையையும் சகோதரனின் பெருமையையும் கீழ்க்காணும் பாடலில் காண முடிகின்றது.

**"மாமே கொடுத்தாச்சி**
**மலை யோர மேயுதுன்னு - நீ**
**ஓடி முடுக்கு"**

**(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.240)**

**குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும் தாய்மாமன்:**

நாட்டுப்புறப் பாடல்களில் கல்வியின் முக்கியத்துவம் குறித்துப் பல பாடல்களில் பாடப்பட்டுள்ளன. தாய் தன் குழந்தை எதிர் காலத்தில் எவ்வாறு கல்வி கற்கப் போகிறான் என்பதை எண்ணிப் பூரிப்படைவதையும் தன் சகோதரன் தன் குழந்தையைப் பள்ளியில் சேர்க்க உறுதுணையாக இருப்பான் என்ற நம்பிக்கையையும் தாலாட்டு பாடல்கள் எடுத்துரைக்கின்றன. கல்வியின் அவசியத்தைக் கிராமத்து மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

**"தாழை மடல் ஓலை கொண்டு**
**தமிழ் படிக்க வந்தவனோ?"**
**(சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.81)**

என்று தன் குழந்தையின் கல்விப் பெருமையைக் குறிப்பிடுகிறாள் தாய்.

**"வெள்ளியால் செய்த ஏட்டில்**
**வைர எழுத்தாணி கொண்டெழுத**
**பள்ளியில் சேர்க்க மாமன்**

**பரிவுடன் வந்திடுவான்" (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு,ப.30)**

என்ற பாடல் வழி மாமனின் செல்வச் செழிப்பையும் பள்ளியில் சேரப்போகும் தன் குழந்தையையும் எண்ணி மகிழ்ச்சியுடன் தாலாட்டுப் பாடும் தாயினையும் காண முடிகிறது.

**காதுகுத்துக் கல்யாணம்:**

குழந்தைக்குக் காதுகுத்துக் கல்யாணம் கிராமப்புறங்களில் இன்றும் நடத்துகின்றனர். அந்த காதுகுத்துக் கல்யாணத்தில் தாய்மாமன் பங்கு பெறுவது பற்றியும் அவர் அளிக்கும் அன்பளிப்புப் பற்றியும் நாட்டுப்புறப்பாடல் விவரிக்கின்றது.

**'மாம்பிஞ்சு கொண்டு**
**மதுரைச்சிமிக்கி கொண்டு**
**காதுகுத்த வாராக**
**கனகமுடி உங்களம்மான்'**
**ராராரோ ராரிரரோ என் அம்மா**
**உனக்கு காதுகுத்த வேணுமுன்னு**
**பொன்னான மாமனுக்கு உங்கள் அம்மா**
**போட்டாளாம் கடுதாசி**
**கடுதாசி கண்டவுடன் உன் மாமன்**
**பெட்டி துறந்தாராம்**
**புடிபுடியா பொன்எடுத்து**
**உச்சிபூ செய்தாராம்**
**ஒசந்த வைரம்வைத்து எங்க அம்மா உனக்கு**
**தகுந்த வைரம்வைத்து**
**தாழம்பூ செய்தாராம்**
**கால ரயில் ஏறி**
**கல்கத்தா போயிறங்கி எங்க அம்மா உனக்கு**
**கல்இழைத்து சங்குஎடுத்து**
**சுத்தி சிகப்பிழைத்து**
**கூறுக்கு பச்சவச்சி**
**வாய்க்கு வைரம்வைத்து**
**வாங்கி வந்தார் உன் மாமா"**

**(ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் தொகுதி8, ப.105)**

தட்டானை அழைத்துக் காதில் துளையிட்டு கடுக்கனையோ காதோலையையோ அணிவிப்பர். அழகான குழந்தைகளைக் கண்டு எமன் ஆசை கொள்வான் என்றும் குழந்தையின் உடலில் காயம் ஏற்படுத்திவிட்டால் அக்குழந்தைக்கு எமன் எத்தீங்கும் செய்யமாட்டான் என்றும் நம்பப்படும் நம்பிக்கையே காதுகுத்துக் கல்யாணத்துக்கு அடிப்படைக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. தமிழகத்தில் மட்டுமின்றி உலகெங்கும் இந்நம்பிக்கை காணப்படுகின்றது. தீமை தரும் ஆவிகள் தலை, வாய், காது, மூக்கு ஆகிய உறுப்புக்கள் வழியாக எளிதில் புகுந்துவிடும் என்ற நம்பிக்கையில் காதில் துளையிட்டுத் தீய ஆவிகளை விரட்டும் சக்தியாகக் காதில் ஏதேனும் ஒரு உலோகத்தை அணிவித்தால் காது வழியாகத் தீய ஆவி நுழைவதைத் தடுத்துவிடலாம் என்ற எண்ணத்தில் இவ்வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். கண்ணேறுபட்டுவிடும் என்பதாலும் காது குத்துகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

**பூப்புனித நீராட்டு விழா**

கிராமப்புறங்களில் பெண்கள் பருவமடைதல் முக்கிய நிகழ்ச்சியாகக் கொண்டாடப் படுகின்றது. பெண்கள் பருவமடைதலைப் பூத்தல், புஷ்பவதியாதல், சமைதல், ஆளாகுதல் என்றெல்லாம் குறிப்பிடுவர்.

'மங்கல நீராட்டு மங்கைக்கு
மங்களத் தாலாட்டு
மஞ்சக் கொடியாளும் வயசுக்கு வந்தாளாம்'

(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.152)

அக்காலத்தில் பருவம் அடைந்த பெண்களைத் தனிக்குடிசை கட்டி வைப்பர். அக்குடிசையினைத் தாய்மாமனே கட்டுவர். பதின்மூன்றாம் நாள் குடிசையை எரித்துவிட்டு, பெண்ணை நீராட்டி, மஞ்சள் நீர்தெளித்து வீட்டிற்கு அழைத்து வருவர். உற்றார் உறவினர் வாழ்த்துவர். தாய்மாமன் பருவம் அடைந்த பெண்ணுக்குச் சிறப்பாகவும் மகிழ்ச்சியுடனும் சீர் செய்யும் வழக்கம் உள்ளதை இன்றும் நம் சமூகத்தில் காணமுடிகிறது.

திருமணச் சடங்கில் தாய்மாமன் :

திருமண நாளன்று அலங்கரித்த மணப்பெண்ணை தாய்மாமன் மாலையிட்டு மணமேடைக்கு அழைத்து வரும் வழக்கம் இருப்பதைத் திருமண வாழ்த்துப் பாடல்கள் காட்டுகின்றன.

**அருகு வந்து தாய்மாமன்**
**பொட்டிட்டுப் பூமுடித்தார்**
**பேடாம் மயிலையர்க்கு**
**பட்டமது கட்டினார்**
**பாரிலுள்ளோர் பார்த்திருக்க**
**கொத்து மாலையைக்**
**கொண்டையில் கட்டி**
**சித்திரக் கலசம்**
**நெற்றியில் துலங்க**
**அலங்கரித்த பெண்ணை**
**அலங்காரமாய் மாமன்**
**மணமகன் அருகில்**
**அழைத்து வந்தார்" (நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.295)**

மேலும் சேலம் மாவட்டத்தில் வேளாளர் திருமணங்களில் பாடப்படும் மங்கல வாழ்த்துப் பாடலில் தாய்மாமன் செய்யும் சீர்வரிசை இடம் பெற்றுள்ளது. இதனை,

**மாமன் கொடுக்கிற**
**வரிசையைக் கேளு**
**நாக மோதிரம்**
**புல்லை சரப்பளி**
**மேல் காது வாளி**
**வெள்ளை வெத்திலை**
**வீராணம் பாக்கு**
**பத்து விரலுக்கும்**
**பசியாணி மோதிரம்**
**எட்டு விரலுக்கும்**
**எணியாண மோதிரம்" (நா.வானமாமலை, தமிழர்நாட்டுப்பாடல்கள்,ப.287)**

என்ற பாடல் அடிகளால் அறிகிறோம்.

**தாய்மாமனின் தாசி உறவு பற்றி:**

மீனாட்சி- சொக்கர் கதை கூறும் தாலாட்டுப் பாடலின் மூல வடிவம் சமூக வளர்ச்சியில் பரத்தமை தோன்றிய கட்டத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

**"தங்கக் குடை பிடிச்சு**
**தாசிமாரை முன்ன விட்டு - உன் மாமன்**
**தாசிக்கே விட்ட பணம் - ரெண்டு**
**தங்க மடம் கட்டலாமே**
**வெள்ளிக் குடை பிடிச்சு**
**வேசிகளை முன்ன விட்டு - உன் மாமன்**
**வேசிக்கே விட்ட பணம்- ரெண்டு**
**வெள்ளி மடம் கட்டலாமே"** **(நா.வானமாமலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், ப.91)**

என்று உடன் பிறந்தவனது தாசி உறவினைப் பெருமையாகப் பாடுகிறாள்.

**"வெள்ளி மலை மேலே**
**வேட்டி துவைக்கையிலே**
**வெள்ளி மலைத் தேவடியா**
**விருந்துக் கழைச்சாளாம்"**
**(அகத்தியலிங்கம் ,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, ப.204)**

என்று ஒப்பாரியில் கணவனது தாசி உறவு அவலமாகவும் பாடப்படுகிறது. பெண்கள் கலாச்சாரம் என்ற அளவில் 'தாசி' என்ற பரத்தமை நிறுவனத்தை ஏற்றுக் கொள்ளுமளவில் வைக்கப்பட்டிருந்தனர்.

**தாய்மாமனுக்குப் பாடும் ஒப்பாரி:**

தமிழ்ச் சமுதாயத்தில் தாய்மாமனின் பெண்ணை அல்லது பிள்ளையை மணக்கும் வழக்கம் உள்ளது. பெண், தாய்வீட்டில் உள்ளவர்களின் நடைமுறைகளை நன்கு அறிந்தவள். அண்ணனின் நடைமுறைகளைச் சிறுவயது முதல் நன்கு அறிந்தவள் என்பதால் அவருடன் சம்பந்தம் கொள்வதைப் பெரிதும் விரும்புகிறாள். தனக்கு அளிக்கப்படாத தன் தாய்வீட்டுச் சொத்துக்கள் தன் பிள்ளைகளுக்காவது பயன்படட்டும் என்னும் அவாவும் இச்சம்பந்தத்திற்குக் காரணமாகிறது. அண்ணன், தங்கையின் குழந்தைக்குப் பிறந்தது முதல் திருமணம் நடக்கும் வரை நடக்கும் நிகழ்ச்சிகளில் முதன்மை வகித்துப் பலவற்றைச் செய்வதால் அப்பெண்ணைத் தன் மகனுக்கு மணம் முடிக்கும் உரிமை உடையவனாக உள்ளான். குழந்தைக்குத் தேவையான பொருள்களை அண்ணன் வாங்கித் தருவதால் தனக்குச் செலவு மீதியாவதுடன் தன் குழந்தை மீது அன்பு பொழிந்து பொருள்களை வாங்;கித் தர ஓர் ஆள் இருப்பதாயும் உணர்ந்து அவள் அண்ணனிடம் மிகுந்த மரியாதைக் கொண்டு அவனை உபசரிப்பதில் மகிழ்கிறாள். இத்தகைய சகோதரிக்குப் பிறந்த மகள் மாமன் இறந்த பொழுது ஒப்பாரி வைக்கிறாள். அப்பாடல் பின் வருமாறு,

**"மாங்கா மரம் வளந்து**
**மாமன் வூட்டு மேடையிலே**
**மால ரெண்டு தொங்குதம்மா - அந்த**
**மால ரெண்டு பொருத்தமில்லே**
**மாமன் மக்க சொந்தமில்லே**
**அரச மரம் வளந்து**
**அத்த வூட்டு மேடையிலே**
**அரும்பு ரெண்டு தொங்குதம்மா - அந்த**
**அத்த மக்க பொருத்தமில்லே**
**அரும்பு ரெண்டும் சொந்தமில்லே"**

**(அகத்தியலிங்கம்,ச(ப.ஆ)., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி1, பக்.252 -253)**
என்ற பாடல் தாய்மாமன் இறந்த பிறகு தனக்கு மாமன் வீட்டில் எவ்வித உரிமையும் இல்லை, மாமன் மகனும் சொந்தமில்லை என வருந்தும் பெண்ணின் மனக்கவலையை எடுத்தியம்புகிறது.

## தொகுப்புரை

சமூகத்தின் சில வழக்கங்கள், கூறுகள் போன்றவை பல காலக் கட்டங்களைக் கடந்து செல்லும் போது அவற்றின் தன்மைகள் மாற்றம் பெற்று சுருங்கிப் போய் வருங்காலத்தில் மிச்ச சொச்சமாக சமூகத்தின் நிகழ்வுகளில் ஏதோ ஒரு வகையில் இலைமறை காயாக வெளிப்படும் இயல்புடையனவாக இருக்கும். தாய்த் தலைமை சமூகத்தின் எச்சமாகவும் தந்தை வழி சமூகத்தில் பெண்கள் சொத்துரிமை இல்லாததன் விளைவாகவும் தனக்கும் தன் வாரிசுகளுக்கு எதிர்கால வாழ்க்கைக்கான பாதுகாப்பு பிடியாகப் பிறந்தகத்தில் தன் சகோதரனைப் பெண்கள் கருதியதன் காரணமாகவே தாய்மாமன் உறவு நாட்டுப்புறப் பாடல்களில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளத்தை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

## துணைநூற் பட்டியல்


1. அகத்தியலிங்கம்,ச.,(ப.ஆ), நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை தொகுதி1, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1987
2. அரவிந்தன்,மு.வை.,(தொ.ஆ), தமிழக நாட்டுப்பாடல்கள், பிரகாஷ் பதி;ப்பகம், புதுக்கோட்டை, 1983
3. இராமநாதன்,ஆறு.,(ப.ஆ), நாட்டுப்புறப்பாடல் களஞ்சியம் தொகுதி10, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்,2002
4. சக்திவேல்,சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,1983
5. சத்தியசீலன்,சி., நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள், அர்ச்சனா பதிப்பகம், பாண்டிச்சேரி, 1988
6. பக்தவத்சல பாரதி, இலக்கிய மானுடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்,2004


**References:**


1. Agathyalingam, S., (B.A.), Folklore Research Code Volume 1, Indian Tamil Folklore Association, Annamalai Nagar, 1987
2. Aravindan, M.V., (B.A.), Tamil Nadu Folk Songs, Prakash Pati;pagam, Pudukkottai, 1983
3. Ramanathan, A.R., (B.A.), Folk Song Collection Volume 10, Meiyappan Tamil Research Institute, Chidambaram, 2002
4. Sakthivel, S., Folklore Research, Manivasagar Publishing House, Chidambaram, 1983
5. Sathiyaseelan, C., Folk Literature Studies, Archana Publishing House, Pondicherry, 1988
6. Bhaktavatsala Bharathi, Literary Anthropology, Identity Publishing House, Putthanatham, 2004



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**